உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்,
மெச்சிநா ளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ ஆனி-௴
1926-௵ ஜூன்-௴ { பகுதி 6.

உ

ஆய்ச்சியர் குரவை

1. மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே?
திருமால்சீர் கேளாத செவி யென்ன செவியே?

2. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியிடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண்ணே?

3. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே?
நாராய ணாவென்னா நாவென்ன நாவே?

இளங்கோவடிகள்.

மகாபாரதம்.

(133-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

வில்லிபாரதம்பற்றிய பிற குறிப்புகள்.

1. இப் பாரதம் வடமொழியிலுள்ள வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பன்று. வடநூற் கதையின் சாரம்சத்தைமட்டும் கொண்டு, பலவிடங்களில் அக்கதையை மாற்றியும், கிளைக்கதைகளையும் பிற் பாகங்களையும் முற்றும் நீக்கியும், வியாச பாரதத்தில் இல்லா விஷயங்களிற் சில சேர்த்தும், இஃது எழுதப்பட்டுள்ளது. இது முன்பு நாம் கூறிய அகஸ்தியபட்டர் என்பார் பாடிய பால பாரதக் காவியத்தின் பொருளமைதியோடு பலவிடங்களில் ஒத்தும், சிற்சில விடங்களில் அந்நூலின் மொழிபெயர்ப்பே யென்று சொல்லும் வண்ணமாயு மிருக்கிறது.

2. இப்பாரதத்தில் உள்ள செய்யுட்கள், 'சுருங்கச்சொல்லல்' முதலிய அழகுகள் யாவும் ஒருங்கமைந்து பலவித சந்தங்கள் பயின்று இனிய ஓசையுடன் திகழ்வன.

3. இஃதெழுதப்பட்டகாலம்:–இதை எழுதியது வக்கப்பாகை வரபதியாட்கொண்டான் காலமாதலாலும், இவ்வாட்கொண்டான் அருணகிரிநாதர் காலத்தவனாதலாலும், அருணகிரியார் விஜயநகரத்தையாண்ட பிரபுடதேவராயன் காலத்தவர் என்பதை எம்மொடு பயின்றவரும், திருத்தணிகைப்பெருமான் திருவருள் வாய்ந்த திருவாளருமான V.S. செங்கல்வராயபிள்ளை M.A; தக்க ஆதாரங்கள்கொண்டு நிலைநாட்டியுள்ளாராதலாலும், இப்பிரபுடதேவராயன் கி. பி. 1450 முதல் 1471 வரை ஆண்டவன் என்பது சரிதவாராய்ச்சியால் விளங்குவதாலும், வில்லிபுத்தூரார் இஃதெழுதிய காலமும் அக் காலமேயாம்.

4. 'வில்லிபுத்தூரார் சிவபக்திமேலிட்டாலோ, அருணகிரியார் சாபம் நீங்க நினைந்தோ, பாரதக்கதை பாடினார்' என்று கூறுவோர், தமக்கு ஆதாரமாக, அவ் வில்லியே கூறியுள்ள தற்சிறப்புப்பாயிரச்செய்யுளில் இருக்கும் மூன்றாவது அடியிற் காணப்படும் "மன்னு மாதவன்" என்பதை 'மன் + உமா + தவன்' என்றும், 'மன்னும் மாது + அவன்' என்றும் பிரித்து, இவ்விரு பிரிப்பிற்கும் 'உமைக்கு

நாயகன்' என்றும், 'பார்வதி சமேதனுயுள்ள பரமசிவன்' என்றும் பொருள்கூறி, மகிழவும் சிலரை மகிழ்வுறுத்தவும் நினைப்பர். இவர்களுக்கு மன்னும் + மா + தவன் எனப் பிரிக்க மனம்வராது. பிரித்தால் அது 'லக்ஷ்மிநாயகனுன விஷ்ணு' எனப்பொருள்படுமன்றோ? இவர்கள் பிரிப்பும் கருத்தும் சரியல்லவென்பது மத துவேஷத்தையொழித்து நோக்குவார்க்குப் புலப்படும். பாரதத்தில் இரண்டொரு இடங்களிலேயே சிவபிரானுடைய விஷயம் கூறப்பட்டுள்ளன. பெரும்பான்மையும் இதிற் காணப்படுவது ஸ்ரீமந் நாராயணனுன ஸ்ரீகிருஷ்ண சரித்திரமேயாதலாலும்; அவர்கள் கொள்ளும் கருத்து, சரித்திரமே எனக்கொள்ளத்தகும் அவருடைய மகனூர் கூறிய பாயிரத்துடன் முரண்படுவதாலும்; அப்பாயிரத்தை மறுக்கத் தக்க ஆதாரம் ஏதுமில்லை யாதலாலும்; அவர்கள் கருத்தும் பிரிப்பும் கூற்றும் அங்கிகரிக்கத்தக்கனவல்ல. யாம் கண்ட ஒரு பிரதியில் "மன்னு மாயவன்" என்றே உளது. இதனை மனம்போனவாறெல்லாம் பிரித்துப் பொருளுரைக்கமுடியாது. 'மன்னும் + மாயவன்' என்றும், 'மன்னும் + ஆயவன்' என்றும் பிரித்தாலும், அது விஷ்ணுவையே குறிப்பதாகும்.

> "காவியப் புலமை வாய்ந்தோர் கணக்கில்பற் பலரானுலும்
> தாவில்சீர் வில்லிபுத்தூர்த் தமிழ்ப் புல வரை ஒவ்வாரே"

என்று முருகதாசர் கூறியது புனைந்துரையன்று.

பாரதம்பற்றிய குறிப்புகள்.

1. வேதவியாச பகவான் மகாபாரதத்தை இயற்றிவருகிற பொழுது விநாயகர் அந்நூலை மகாமேருமலையில் தமது தந்தங்களில் ஒன்றைப் பறித்து அதனையே எழுதுகருவியாகக்கொண்டு எழுதி முடித்தருளினதாக,

"—சீதப்

> "பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர் தீட்டும்
> தனிக்கோட்டு வாரணத்தின் ருள்"

என்று பெருந்தேவனுர் பாரதத்தும்,

> "நீடாழி உலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே
> வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள்
> ஏடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணி தன்
> கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"

என்று வில்லிபாரதத்தும்;

"கலியுக வியாதன் சொல்லக் கணபதி எழுது பாடல்" என்று பாரத வெட்டுப்பிரதியொன்றில் பாயிரத்தோடு காணப்படும் ஒரு செய்யுளிலும்;

"பண்டு பாரதமெ னுங்கதை பராசரன் மகன்
பகரவெங்கரிமு கன்பரு மருப்பை யொருகைக்
கொண்டு மேருகிரி ரத்தொருபு றத்திலெழுதிக்
குவலயம் பெறுத வப்பவனு ரைப்ப தரிதால்"

என்று கலிங்கத்துப் பரணியிலும் கூறியுள்ள செய்யுட் பகுதிகளால் தெரியவருகிறது. ஆயினும் வடநூல் எதனிலும் விநாயகர் இங்ஙனம் பாரதம் எழுதியதற்கான ஆதாரம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

2. பாரதத்திலிருந்து அறியக்கூடிய நீதிகள் பலவுள அவற்றுள் சில வருமாறு:—

1. பிறன்பொருள் வெஃகலிற் பேதைமை யில்லை.
2. கற்புறு மங்கையர் கடவுட் டன்மையர்.
3. தெய்வ பலமே மெய்ப்பல மாகும்.
4. ஐக்கியம் இன்றி யமையா தியார்க்கும்.
5. தருமந் தழைக்கும் தலத்தினி லேயே
   மழைவளம் சிறக்கும்; மன்னுயிர் செழிக்கும்.
6. தாய்சொற் கேட்டலும் தந்தைசொற் கேட்டலும்
   ஈசற் குகந்த இன்செய லாகும்.
7. வஞ்சகர்க் கழி(வு)அவர் வஞ்சகச் சூழ்ச்சியே.
8. நன்றிகொன் றோர்க்கு நலம்பல மில்லை.
9. அடாது செய்பவர் படாது படுவர்.
10. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
11. ஆசாற் பக்தி அறிவொளி பயக்கும்.
12. ஒறுத்தார்க் கின்பம் ஒருநா ளைக்கே.
13. பொறுத்தார்க் குப்புகழ் பொன்றிய பின்னரும்.
14. காலத் திற்காம் கோலமே கொள்க.
15. கொள்ளுவ தள்ளுவ கூர்ந்துணர்ந் தறிக;
17. நன்மை விதைத்தால் நன்மை விளையும்.
18. தீமை விதைத்தால் தீமை விளையும்.
19. பெரியோர் நன்மொழி பேணுதல் பெருமை.

20. அறிவால் பெருமை; பிறவியின் இல்லை.
21. 'ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே?'
22. ஓதலிற் சிறந்த(து) ஒழுக்க முடைமை.
23. உயிரினும் மானமே ஓம்பற் குரியது.
24. நடுவு நிலைமையே நல்லோ ருக்கணி.
25. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
27. பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவுக.
28. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
29. மூர்க்கரும் முதலையும் கொண்டது விடா.
30. தெய்வம் சீறிற் கைதவ மாளும்.
31. அறமே வெல்லும் மறம் வெல்லாது.

3. பாரதம் அவ்வப் பாகத்தில் அடங்கியுள்ள விஷயத்தைக் குறிக்கும் சொற்களால், ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், வீட்டுமபருவம், துரோண பருவம், கர்ணபருவம், சல்லியபருவம், சௌப்திகபருவம், ஸ்திரீ பருவம், சாந்திபருவம், அநுசாஸநபருவம், அசுவமேதபருவம் ஆச்சிரமவாஸபருவம், மௌஸலபருவம், மகாப்ரஸ்தான பருவம், ஸ்வர்க்காரோகணபருவம் எனப் பதினெட்டுப் பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

4. ஐந்நூறுக்கு அதிகமான கிளைக்கதைகள் (உபாக்கியானங்கள்) பாரதத்தில் உண்டென்றும், பாரத கதையில் நிகழ்ந்த விஷயங்கள் துவாபராந்தத்தில் எனவும் கூறுவர்.

5. பாரதத்தின் முக்கிய கருத்து, ஆக்கல், அழித்தல், அளித்தல், முத்தியருளலாகிய பரமாத்ம சரித்திரங் கூறலேயாம். 18 பருவங்களில் முதலாறு பருவங்கள் படைப்பு அளிப்புக்களையும்; இடையாறு பருவங்கள் அழிப்பையும், கடையாறு பருவங்கள் வீடுபேற்றையும் குறிப்பன என்று, ஊன்றி நோக்குவோர் உணர்வர். பாரத கதையின் வெளிப்படைப் பொருளுடன் உள்ளுறை பொருளும் உயத்துணரத்தக்கது.

(முற்றிற்று.)

பத்திராதிபர்.

UNIVERSAL PRAYER.

ஸர்வ ஜன ஜபம் என்னும் அனைவரும் வேண்டல்.

(154-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

என்னை எவரும் இகழினும் புகழினும்,
செல்வம் என்னைச் சேரினும் [1]தீரினும்,
இன்றே இறக்கினும் என்றும் இருக்கினும்,
எவ்வெவ் இன்பையும் எய்துதற் கெனினும்,
எவ்வெத் துன்பையும் [2]இரித்தற் கெனினும்,
உண்மை வழுவி ஒழுகே னாக: (௫௮)
“[3] உள்ளின் தன்மை உண்மை”யே ஆக,
“வாயின் தன்மை வாய்மை”யே ஆக,
“மெய்யின் தன்மை மெய்ம்மை”யே ஆக,
எண்ணம் சொல்செயல் யாவுமெய் ஆக,
உண்மையும் தோற்றமும் ஒன்றே ஆக,
ஒன்றையும் ஒளித்திடா துள்ளோடு புறம் ஒத்
தியற்றுகா ரியமெலாம் இயற்றுவே னாக: (௬௫)
எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவி [4]ஆற்றுவே னாக;
[5] என்னுடை நன்மைபோல் யாவர் நன்மைக்கும்
உழைத்திட ஊக்கம் உடையே னாக;
என்வாழ் நாளெலாம் இடையறா தினிதே
பிறர்க்குநன் றாற்றிப் பெற்றிடும் இன்பால்
என்மனம் நிறைவினை எய்துவ தாக: (௭௨)
எனைஇகழ் வலியரை [6] இறைஞ்சே னாக;
[7] ஆருயிர் போவதற் கஞ்சே னாக;
அவ்வுயிர் வாழ்வினை அருவரே னாக;
வஞ்சகர், தீயர்,தீ வழியிற் பிறரால்
செலுத்திடப் பட்டவர் [8] திறத்தும் என்மனம்
கோபம் சிறிதும் கொள்ளா தாக;

---

1 நீங்கினும். 2 ஓட்டுதற்கு. 3 மனத்தின் 4 செய்வேன். 5 என்னுடைய. 6 வணங்கேன். 7 அருமையான உயிர். 8 இடத்திலும்.

இச்சிறு தன்மைய ரெவருட னேனும்,
எச்செய லெனினும்யான் இயற்றிட நேருமேல்,
என்மனம் அமைதியை இழந்திடா தாக: (அக)

வருத்தம்என் மனத்தினை வருத்திடா தாக;
கடல்மலை வனம்இடு காடுகள் முதலா
வெருவிடு தனியிடம் மேவினே னாயினும்,
பாய்புலி பிடிக்கினும் பாம்பு கடிக்கினும்,
என் மனம் நடுக்கினை எய்திடா தாக;
அலையா உறுதியுற் றசைக்கவொண் ணேனாய்,
[9] வச்சிர வெற்பென [10]வற்பினை உற்று,
விருப்புறு பொருள்கள் விட்டு விலகினும்,
வெறுப்புறு பொருள்கள் மேவிச் சேரினும்,
ஒழுக்கம் [11] வழுக்கா உளத்தே னாக. (அரு)

ஒருயி ரும்துன் புற்றிடச் செய்யா
முதன்மை அறம், புவி முழுதும் பரம்புக.
துன்பம் எவ் வுயிரையும் துன்னா தொழிக.
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா உயிர்களும் இன்பம் எய்துக.
அனைத்துயிர் களும் மன அமைதியை அடைக.
நன்மைஎங் கெங்குமே நண்ணிஓங் கிடுக.
தீமை எவ் வெவருமே செயலொணா தாக.
அறிவைப் பெருக்கலால், அருஞ்செயல் செயலால்,
பெறுதற் குரியநற் பேறுக ளெல்லாம்,
யாவரும் எய்தி இன்புடன் வாழ்க. (க0உ)

தம் தாய் போற்றாய் இல்லை: தம் தாய்மொழி
எனத் தமக் காம்மொழி எம்மொழி யும் இலை
என்று தாய் மொழியை எவரும் பேணுக. (க0ரு)

உடற்றுன் புளத்துயர் உயிரைவிட் டொழிக.
பஞ்சமும் நோய்களும் பாரைவிட் டகல்க.
வேண்டிய பொழுதினில் வேண்டிய அளவில்
மிகாஅது குறையாது விண்மழை பொழிக.
ஆள்வார் முறைபிற ழாமே ஆள்க.

---

9 - வயிரமலை, 10உறுதியை. 11 தவறுத.

நீதி பதிகள் நெறியில் நின்று
பேத மின்றி நீதி செய்க.
பற்பல மக்கட் பகுதியும் பகைஅற்
றொற்றுமை உற்றுநண் புடையராய் வாழ்க. (௧௪௦)

கொலைகள வாதிய கொடுந்தொழி லல்லா
எந்தத் தொழிலும் இழிவில தென்றும்,
தொழில்புரி பவர்மனத் தூய்மைக் கியையத்
தொழிலதான் உயர்வினைத் துன்னிடு மென்றும்,
அவரவர் தமக்கிசை வாம்தொழில் செய்தல்
அறமா மென்றும், திறமா நம்பிக்
கல்வித் துறையிலோ, கைத்தொழில் முறையிலோ,
எதனி லெனினும், இடைவிடா துழைத்துப்
பிறந்த நாடு பெருமை அடையச்
சிறந்த செயல்கள்தம் திறமைக் கியன்றவா
றனைவரும் செய்குவா ராகி வாழ்க. (௧௨௫)

மண்முழு வதும் ஒரு மனையா, மண்வாழ்
மக்கட் டொகுதி அம் மனைவர் குடியாக்
குனிப்பரு நாடர் அக் குடியில்உள் ளாரா,
ஒருகுடி உள்ளவர் ஒருவரோ டொருவர்
சண்டைசெய் திடுதலைத் தவிர்த்திட லன்றி
அன்பொடு வாழ்தல் அறநெறி ஆதல்போல்,
ஒருநாட் டினர் மற் றொருநாட் டினரோ
டமர்புரி வதை ஒழித் தன்பராய் வாழ்தல்
அறநெறி யெனஅறிந் தடைகல் வாழ்வே. (௧௩அ)

(முற்றிற்று.)

ராவ்ஸாஹிப்: V. P. சுப்பிரமணிய முதலியார்.

சேரமான் பெருமாள் நாயனார்.

(109–ம் பக்கத் தொடர்ச்சி)

கழறிற்றறிவாராகிய அப் பெருமாக்கோதையார், ஆன்மாக்களெல்லாம் உய்யும் பொருட்டு, நன்னாளில் நல்லோரையில் நன்முடி புனையும் நற்செய்தி நகரெங்கும் பரவியது. அச்செய்தியை யறிந்த அந்நகர மாக்களிற் சிலர், தோரண கம்பங்களை நாட்டுவோரும், தூண்களைச் சித்தரித்த உறைகளால் மூடுவோரும், தம் நெடுமாடங்களுக்கு மணிவடங்களை யணிவோருமாய்ப் பரபரப்புடனிருந்தனர். இன்னும் சிலர், சந்தனத்தை அகிலாற் சமைத்த நறுஞ்சாந்தோடு தெருக்களிலெல்லாம் வாரியிறைத்து, செழுமலர்களைச் சொரிந்து மற்றவற்றைச் செப்பனிடுவாராயினர். மற்றும் சிலர் தெருத்தெற்றிகளில், செயிரறு தீபங்களை வரிசை வரிசையாய்க் கொண்டுவந்து வைப்பாரும், அகிற்றுண்டங்களை நெருப்பிலிட்டு நறும் புகையை யூட்டுவாருமா யிருந்தனர்.

இங்கு இவ்வாறாக, ஒரு சுபமுகூர்த்தத்தில், அரண்மனையில் ஆடவர் பலர் கோதையாரைச் செம்பொனாசனத்தில் வீற்றிருக்கச் செய்து, முரசங்களும் சங்குகளும் ஒலிப்ப, வாசம் கலந்த பல புண்ணிய தீர்த்தங்களினால் ஸ்நானம் செய்வித்து, வஸ்திரம் சாத்தினர்; நெற்றியில் பொற்றிலதமிட்டனர்; பொன்னணி பலவும் புனைந்தனர். மண்மகள் புணர்தற்காம் திருமணக்கோலம் எல்லாம் செய்தனர். குறித்த நல்லோரை நெருங்கியதும், அந்தணர் அநேகருக்குக் கோதையார் நற்பலதானங்கள் கொடுத்து, அருமறைகள் ஒலிக்க, மங்கல தூரியம் கலிக்க, சங்குகள் முழங்க, கற்பகப் பூமாரி பெய்ய, அந்நகரத்தார் அனைவரும் “இனி உய்ந்தனம்; உய்ந்தனம்” என்று பேரானந்தப் பெருஞ் செல்வமடைய, மகளிர் மங்கலகீதம்பாட, இருபுறத்தும் வெண்சாமரம் வீச, ஆலவட்ட மசைய, சிவாலயத்தைச் சென்றடைந்து வலம் செய்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்தெழுந்து, பட்டடுத்து யானை மேற்கொண்டு, நகரிவலம் செய்யப் புறப்பட்டார்.

நாயனாரின் விசேட சங்கமபக்தி:—இவ்விதம் நகரி வலம் செய்துவருங் காலையில், அவர், ஒரு வண்ணான், தோளில் உவர்ப்

பொதி சுமந்துகொண்டு தம்முன்னே வரக்கண்டார். அவன் சுமந்து வந்த உவர்மண் மழையினால் கரைந்து ஊறப்பெற்று, சரீரம் முழுவதும் படிந்து வெளுத்திருந்தது. இதனைக் கண்ட நாயனார், விபூதியை உத்தூளனம் செய்த சிவனடியாரது திருவேடமென்றுட்கொண்டார்; உடனே தாம் ஏறிவந்த யானையினின்றும் கீழேயிறங்கினார்; விசேட பக்தியினால் அவனருகில் விரைந்து சென்றார்; தம் இரு மலர்புரை கரங்களையும் தலையிலே குவித்து வணங்கலுற்றார். வணங்கக் கண்டதும், அவ்வண்ணான் மனநடுங்கிக் கலங்கி, மெய் விதிர்த்து, சேரர் பெருமானை விழுந்து நமஸ்கரித்து, எழுந்து,"ஏ பெருமானே! அடியேனை யாரெனக் கொண்டது? அடியேன் அடிவண்ணான்." என விண்ணப்பித்து நின்றான். அதற்குச் சேரமான்பெருமாள் நாயனாரும் "அடியேனை யறியீரோ! அடியேன் அடிச் சேரன். தேவரீர் திருநீற்று வேடத்தை நினைப்பித்தீர். வருந்தாதே போம்" எனப் பகர்ந்தருளினார்.

நாயனார் பொன்முடி சூடலும் நாடாளலும்:—இவ்வதிசயத்தைக் கண்ட அங்கிருந்த மந்திரி புரோகிதர் முதலாயினோர், தம் அரசரின் விசேட சங்கம பக்தியைக் குறித்து, மிகவும் ஆச்சரியமடைந்து, நாயனாரை யானைமேலேற்றி, நகரி வலம் கொண்டு மாளிகையை வந்தடைந்தார். அடைந்ததும், நாயனார், யானையினின்றும் கீழே யிறங்கி, அரண்மனையி னுட்போந்து, மணிமண்டபத்தையடைந்து, வெண்கொற்றக் குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, அரசர்கள் பல்வகை மலர்கள் தூவி வணங்கித் துதிக்க, சிறக்க அரியாசனத்தில் வீற்றிருந்தருளினார். புரோகிதர் முறைப்படி பொன்முடி கவித்தலாகிய சடங்கைப் பல்லியங்கள் ஒலிப்ப, மறைகள் பலசொல்லி மந்தர விதிப்படி செய்து முடித்தார். இதுதொட்டுப் பெருமாக்கோதையார், சிம்மாசனத்திலிருந்து, மனுநீதி வழுவாது, சோழர் பாண்டியர்களோடுகூட நிலவும் பெருமுக்கோக்களாய், அலகிலா அரசர்கள் திறை கொணரவும், அகப்பகை புறப்பகை யிரண்டையும் அறுத்து, சைவசமயம் அபிவிருத்தியாகும்படி அரசியற்றுவாராயினர்.

> நீடுமுரிமைப் பேரரசால் இகழும் பயனும் நிறை தவமும்
> தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
> ஆடுங் கழலே யெனத்தெளிந்த அறிவாலெடுத்த திருப்பாதம்
> சூடு மன்பி லருச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமான்.

இவ்வாறு இங்ஙனம் அங்காயனர், தில்லையின்கண், சிற்றம்பலத்து ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் சபா நாயகரின் திருவடித் தாமரைகளை தாம் தேடும் பொருளும், தமக்குரிய பெருந்துணையும் என்று தெளிந்த மெய்யறிவினல் அவ்வடிகளை மிகுந்த பக்தியோடு சைவாகம விதிப்படி எந்நாளும் பூசை செய்து வருவாராய்த் தினந்தோறும், தில்லைப் பெருமானருக்கு, திருமஞ்சனம் செய்து, திருப்பள்ளித்தாமமும், சந்தனமும் தூபதீப முதலாயினவும், திருவமுதும் சமர்ப்பித்து, விதிப்படி பூசை செய்துவர, பூசை முடிவிலே, சபா நாயகர் அவரைத் தமது திருச்சிலம்பொலியைக் கேட்பிப்பாராயினர்.

இவ்வண்ணம் நடத்திவரும் சிவபூஜா புண்ணிய விசேடத்தால், நாளும் இன்புற்றமர்ந்த அங்காயனர், 'இல்லை' யென்றிரப்போருக்கெல்லாம் 'இல்லை' யென்னது, கனகமாரி பொழிகின்றவராகி, பரமசிவனுக்குரிய பல யாகங்களையும் செய்து அழியாப் புகழ் பெற்ருர்.

(இன்னும் வரும்.)

S. சீதாராமையர்,
Tamil Pandit, National College, High School, Trichy.

விடுகதை வினு.

நாலெழுத்தில் விடுகதைஒன் ருகும். அந்த
நாலெழுத்தில் முற்பாதி 'தவிர்' என்ரும். அந்
நாலெழுத்தில் பிற்பாதி 'சரிதம்' ஆகும்.
நவில்மூன்றும் ஒன்றும் உறின் 'செய்யுள்' ஆம். அந்
நாலெழுத்தில் மூன்(று), இரண்டு, 'விடமே' யாகும்,
நண்ணுமொன்றும் ஈறும்உறின் 'வித்தே' ஆம். அந்
நாலெழுத்தி லாய மொழி யதுதான் என்னே?
நவிலுதிரீ விடுகதையை நன்கறிந்தே.

A R. ஸ்ரீநிவாச முதலியார்,
ஆனைமலை.

* SCOTS WHA HAE

[*Robert Bruce's Address to his army before the battle of Bannockburn]

Scots wha hae wi' Wallace bled,
Scots wham Bruce has aften led,
Welcome to your gory bed,
Or to victorie ! (1)

[wha-who. hae-have. wi'-with. Wallace-William Wallace. wham-whom. aften-often, victorie-victory.]

Now's the day and now's the hour;
See the front o' battle lour!
See approach proud Edward's power
Chains and slaverie. (2)

['s-is, o'-of, lour-lower, slaverie-slavery]

Wha will be a traitor knave?
Wha can fill a coward's grave?
Wha sae base as be a slave?
Let him turn and flee! (3)

[sae-so]

Wha for Scotland's king and law,
Freedom's sword will strongy draw,
Freeman stand or freeman fa'?
Let him follow me. (4)

[fa'-fall].

By Oppression's woes and pains!
By your sons in servile chains!
We will drain our dearest veins
But they shall be free. (5)

Lay the proud usurpers low!
Tyrants fall in every foe!
Liberty's in every blow
Let us do or die. (6)

ROBERT BURNS

சேனைக்குரைத்த ஓர் செம்மலின் செம்மொழி.

[இது 'பானக்பர்ன்' என்ற இடத்தில் யுத்தம் நிகழ்வதன் முன் புரூஸ் மன்னன் தன் சேனையை ஊக்கற்கு உரைத்த ஆண்மைக் கட்டுரை.]

செங்குருதி வாலேஸுடன் சேர்ந்துகுத்த ஸ்காட்டுகளே!
பொங்கமரில் பன்முறையும் புரூஸ் நடத்து ஸ்காட்டுகளே!
உங்கள்குரு திப்பாயல் உற்றிடவோ, மற்றிலையேல்,
வெங்களத்தில் வெற்றியினை மேவிடவோ வாரீரே. (௧)

[குருதி—இரத்தம். அமர்—போர். மேவிட—பெற்றிட.]

நாட்பொழுதும் அதற்கிதுவே. நாழிகையும் ஈதேயாம்.
மூட்டியபோர் முனைமுடுகு முன்னணியை நோக்குமினே!
மேட்டிமைசால் எட்வர்டின் வியன்படையின் விறல் காண்மின்!
வாட்(டு)அடிமைத் திறம் காண்மின்; வன்றளையும் காணுமினே.

[ஈது—இது. முடுகு—விரைந்து நெருங்கிவரும். மேட்டிமை—கர்வம். வியன்—பெரிய. விறல்—வலிமை. தளை—விலங்கு.]

கள்ளமன விசுவாச காதகம்யார்க் குண்டு? பயங்
கொள்ளிபுகற் குரியசவக் குழிபுகுதற் கிசைவோன் யார்?
எள்ளடிமைத் திறம் விரும்பும் ஈனன்எவன்? அவன் இன்னே
பொள்ளென இவ் விடம்விட்டுப் போந்து விரைந்தோடுகவே. (௩)

[எள்—இகழ்ந்தக்க; பொள்ளென—விரைவாக]

எத்தகையோன் ஸ்காட்லண்டின் இறைபொருட்டும் முறைபொருட்டும்
உத்தம சுதந்தரவான் உருவநிற்போன்? தன் வயத்த
மெய்த்தகவோ னுவெற்றி மேயினும்சா யினும்நிற்போன்
எத்தகையோன்? அத்தகையோன் என்னைப்பின் பற்றுகவே (௪)

[இறை—மன்னவன். முறை—சட்டம். தன்வயத்த—சுதந்தரத்துடன் கூடிய; மெய்த்தகவோன்—உண்மையான தகுதிவாய்ந்தவனாய்.]

வெம்மைமிகு கோல்விளைக்கும் வேதனையை வெந்துயரை
நும்மகவோர்க் குறும் அற்ப நோன்றளையை நாம்கருதி
நம் அரிய பைங்குருதி நனிவடிப்பம். இதனாலே
அம்மகவோர் தாம்எனினும் அடைவாரால் சுதந்தரமே. (௫)

[வெம்மைமிகு கோல்—கொடுங்கோல். மகவோர்—மக்கள். நோன் தளை—வலிய விலங்கு. பைங்குருதி—பசிய ரத்தம்.]

அரசுரிமை அபகரித்த அகந்தையரை வீழ்த்துமினே!
கருதலரில் உளஒவ்வோர் காதகனும் வீழ்ந்திடவே.
அரியசுதந் தரம்,நோக்கின் அடிக்கும்அடி தொறும் உளதால்
மருவுதொழில் முடித்திடுவோம். மாளாதேல் முடிந்திடுவோம் (௬)

[கருதலர்—பகைவர். காதகன்—கொடியன், கொலைஞன். மருவு தொழில்—எடுத்த கருமம். முடிந்திடுவோம்—உயிர்விடுவோம்.]

ம. கோபாலகிருஷ்ணன்.

பிரமசர்யம்.

(124-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஸ்நானம் குளிர்ந்த நீரில் செய்தலே நலம். வெந்நீரிற் செய்யின் பலஹீனர்களுக்கு வீரியம் நீற்றுக் கணதோஷமாதிய காணும். நீராடும்போது மர்மஸ்தானங்கள் உட்பட சகல அவயவங்களையும் நன்ருகத் தேய்த்து அழுக்காதிய போக்கவேண்டும். இல்லையேல், உஷ்ணம் மிகுவதுடன் துர்க்கந்தமும் இரணமும் உண்டாம்.

உடை கூடுமானவரை குறைவாக இருத்தலே நலம். நய வஸ்திரங்கள் பிரமசரியத்திற்கு விரோதமானவை. கோவணம் எக்காலத்தும் உடுத்தல் அவசியம்.

தேகாப்பியாசத்தின்பொருட்டும் பிரமசரியத்தின் நிமித்தமும், சில 'ஆசனங்கள்' அல்லது நிலைகளை எப்பொழுதும் அப்பியசித்து வரல் நலந்தருவதாம். இந்நிலையைப் பிரதிதினமும் ஐந்தாறு நிமிஷ மேனும் அனுஷ்டித்துவரின் நன்மையுண்டு. அத்தகைய ஆசனத்தில் 84 வகை உண்டு என்பர். ஆயினும், பிரமசரியத்திற்கு வேண்டியன நான்கே. அவை சித்தாசனம், பாதாங்குஷ்ட ஆசனம், சிருஷாசன முதலியனவாம்.

'சித்தாசனம' என்பது பிரார்த்தனைக்காலத்தும், பிராணுயாமத்தின்பொழுதும் உபயோகிக்கப்படவேண்டியது; அது இடதுகால் குதியினல் குதத்துவாரத்திற்கும் நீர்த்துவாரத்திற்கும் நடுவில் நீர்த்துவாரத்தை அழுத்திய வண்ணமாய் வலது காலை இடதுகால் மீது இட்டு நிற்கும் நிலையாம். அப்பொழுது முதுகு நேரே நிமிர்ந்திருத்தலும், திருஷ்டி மூக்கின் நுனியிலும் இருத்தல் வேண்டும்.

பாதாங்குஷ்ட ஆசனமாவது இடதுகாலை மேற்கூறியவாறே வைத்து, வலது காலை நேராக நீட்டி, இடையில் முழங்காலை மடக்காமல், இரண்டு கைகளாலும் வலதுகாலைக் கெட்டியாகப் பிடித்து, முன்புறம் நன்ருப்படிந்து மூக்கு நெற்றி இவை முழந்தாள்மீது தாக்க, இருக்கும் நிலையாம். இதற்கும் பார்வை மூக்கின் நுனியில் இருத்தல்வேண்டும். சிருஷாசனம் என்பது தலைகீழாக நிற்றலாம். இதை அதிக நேரம் செய்தல் வேண்டா.

நான்காவது வகையாவது இடதுகால் முன் பாகத்தின்மீது தேகபாரத்தை இருத்தி நிற்றலாம். வலது கால் இடது தொடையின் மேலும் பார்வை மூக்கின் நுனியின்மீதும் இருத்தல் வேண்டும்.

எல்லா ஆசனங்களும் நிலத்தின்மீது ஒரு கம்பளத்தை விரித்து அதன்மேல் நூல்வஸ்திரத்தைப் பரப்பிக்கொண்டு அதன் கண் இருந்து செய்தலே நன்று.

பிராணுயாமம் என்பது, உத்தேசம், சரீரம், மனம், நித்தியம் முதலியவற்றினுல் நிகழ்த்தும் பரிசுத்த பிரார்த்தனையேயாம். இது செய்யவேண்டிய காலம் உஷத்காலம் அல்லது இரவில் படுக்கும் நேரம். இதனை, உண்பதற்கு இரண்டுமணிக்கு முன் செய்தல் வேண்டும். சாப்பிட்டு இரண்டு மணி வரை செய்தல்கூடாது. இது செய்யும் காலத்தில் ஏகாந்தம், நிசத்தம், சுத்தவாயு இவை அத்யாவசியம் சித்தாசனத்திலிருக்கும்போது இதனைச் செய்க.

பிராணுயாமத்தில் மூன்று வகைகள் உண்டு.: நிதானமாகச் சத்தம் நமக்குக் கேட்குமாறு வாயுவை இடது மூக்கிலிருந்து இழுத்து சிறிது நேரம் இரண்டு மூக்குகளையும் மூடிப்பிடித்து வாயுவை உள்ளே இருத்திப் பின் வலது மூக்கிலிருந்து நிதானமாக வெளியே விடவேண்டும். இதற்கும் பார்வை மூக்கின் நுனியின்மேலேயே இருத்தல் ஆவசிகம்.

வாயுவை உட்கொள்ளும்பொழுது "கடவுள் எங்கும் இருக்கிருர். அவர் பரிசுத்தர், பரிசுத்தத்தையே நான் நுகர்கின்றேன்." என்ற உறுதியும், (பாவம் செய்திருக்கும்போதும்) 'பரிசுத்தத்துடனேயே இருக்கின்றேன்' என்ற உறுதியும், சுவாசம்விடும் பொழுது 'பாபத்தையே கழிக்கிறேன்' என்ற உறுதியும் கொள்ள வேண்டும். (இன்னும் வரும்.)

தமிழ்ப்பண்டிதர்: சே. ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர்.

ஓர் ஐய விஞ.

"காலையில் ஒன் ருவர் ; கடும்பகலில் ஒன்ருவர்
மாலையில் ஒன் ருவர் மனிதரெலாம்—சாலவே
முல்லானைப்போலவே முகமும் அகமும் மலர்
நல்லானைக் கண்டறியோம் நாம்"

இதில் "முல்லான்" என்னும் கொடைவள்ளல் யார்? இவன் வரலாறு யாது? அறிந்தவர் இப்பத்திரிகை வாயிலா அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

உ. அ. நா.
"தமிழர் நண்பன்."

மதிப்புரை.

பாண்டியராஜ வம்ச சரித்திரம் மூன்றும் பகுதி:—அம்பா சமுத்திர நகர் திரு. அரிஹர பாரதிகள் இப்போது இச்சரித்திர நூலின் மூன்றுவது பகுதியை வெளியிட்டிருக்கின்றனர். இதன் கண், பிற்காலப் பாண்டிய மன்னர்களின் வரலாறுகளைச் சாசன ஆதாரங்கொண்டும் இவற்றுலாதரிக்கப்பெறும் கன்னபரம்பரைச் செய்திகளைக் கொண்டும் தெளிய எழுதியிருக்கின்றனர். மன்னர் வரலாற்றின் பின்னர், பாண்டிய மன்னராட்சியில் தமிழ்மக்கள் அறிந்துகொள்ள வேண்டுவவாம் பல சிறந்த செய்திகளைத் தனித் தனி யெடுத்து விளக்கி முடித்திருக்கின்றனர். இச் சரித்திரத்தினைக் கற்போர் தமிழ் நாட்டின் பண்டை வழக்குகளை நன்கு தெரிந்து கோடற்கு இவ்வுறுதிக் கட்டுரை இன்றியமையாததே. இந்நூலா சிரியர், தம் தாய்மொழி மாட்டும், தண்டமிழ் நாட்டின் மாட்டும் கொண்டுள்ள தூய பற்றுனே இத்தகைய அருந்தொண்டைப் புரிந் துளார். இற்றை நாளில் புலவர்க் குரியவாகச் சாற்றுந் தமிழ்த் தொண்டுகளுள் இவர் புரிந்தது யாவரும் போற்றுந் திருத்தொண் டாம் என்பதிற் சிறிதும் ஐயமின்று. பல மன்னர் வரலாறுகள், புலவர் வரலாறுகள், சில நூல் வரலாறுகள், பல ஆலய வரலாறுகள், பல போர் வரலாறுகள், தண்டமிழ் மண்டலத்து வழக்குகள் முத லிய வெல்லாம் சின்னுண் முன்னெல்லாம் அறியப்படாது இருள் வாய்ப்பட்டு மறைந்திருந்தன. இன்னோ ரன்னவற்றை நமது பாரதி கள், தம் அரிய முயற்சியானும் அன்பானும் எடுத்துத் தொடுத்துக் கோவைப் படுத்துக் கொடுத்த கொடைத்திறனை உன்னி உன்னி மகிழ்தலன்றிப் பிற யாது செய்யவல்லேம்? இவர்கள் இதுபோலும் நன்முயற்சிகளில் தவிராதுழைத்து எஞ்சிய தமிழ் மன்னர் வரலாறு களையும் இயன்றவரை எழுதி யுதவுவர் என்று எண்ணுகின்றேம். இம் மூன்றும் பகுதியின் விலை (முன்னிரண்டு பகுதிகளைப்போன்று) அணு 10 தான். வேண்டுவோர் "R. அரிஹர பாரதிகள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், தீர்த்தபதி ஹைஸ்கூல், அம்பாசமுத்திரம்" என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறுக.

பத்திராதிபர்.

பராந்தகன்.

ஆறாம் காட்சி.

காலம்:—நள்ளிரவு.

இடம்:—கள்வர் மனை.

பாத்திரங்கள்:—இருளன், பேச்சி, மாயாண்டி முதலியோர்.

இரு:—(கதவைத்தட்டிய வண்ணமாய்) ஏ கறுப்பா! ஏ வீரா! டே அமாவாசை! என்ன தூங்குமூஞ்சிகடா இவுக! ஏ குட்டி பேச்சி!

[கதவை மடமடவென்று உரத்துத் தட்டுகிறான்.]

பே:—இரு அண்ணே! இரு. வாரேன். வாரேன். காதிலே விளல்லியோ நாஞ் சொல்ரது?

[விளக்குடன் ஓடிவந்து கதவைத் திறக்கிறாள்]

இரு:—மணி இப்பலதானே பன்னெண்டடிச்சிச்சு. ஒனக்கு அதுங் காட்டி இம்புட்டு ஒறக்கமா?

பே:—ஆரு ஒறங்கினது? நானு? நல்லாச் சொன்னே. வாரேன் வாரேனிண்டு சொல்லிக்கிட்டிருக்கையிலேயே லொட லொடண்டு கதவெப் போட்டு இந்த ஒடயா ஒடப்பே? அம்புட்டு என்ன அவசரம்? என்ன தலைபோற காரியத்துக்கு இந்தக்கட்டுத் தட்டினே?

இரு:—என் அவசரம் எனக்குல்லே தெரியும்? உனக்கென்ன ஆத்தா? நீ வீட்டுக்குள்ளே இருந்துகிட்டு நல்லாப் பொங்கிப் போடுவே. பேசவே—சரி, அவுகளே எளுப்பு சீக்கிரம்.

பே:—ஏன்? என்ன சமுசாரம்?

இரு:—ஒண்ணுமில்லே. நம்ம தேடிக்கிட்டுத் திரிபா ஆளு, நாலு பேரோடே அந்தாலே போய்க்கிட்டிருக்கான்.

பே:—அதுக்கு இப்ப என்ன செய்யணுங்கிறே? பெரியவுகளும் அமாவாசையும் வெளியே போனவுக இன்னும் வல்லே: வீரனும் கருப்பனும் தூங்கராக. அந்தத் தூங்குமூஞ்சிகளெ எளுப்பி ஒக்காரவைச்சு சமுசாரம் சொல்ரத்துக்குள்ளே பய பரிஞ்சுடு

வன் எங்கேனாச்சும். சரி. ஒண்ணு சொல்ரேன் கேளு: நாளி ரொம்ப ஆச்சு. அந்தப்பய எங்கே ஓடிப்போய்டுவான்? இன்னிக்கில்லாட்டி நாளைக்கிச் சிக்கிக்க மாட்டான்? எமனறியாமலா உசுர் போகும்? நீ இப்போ எங்கெங்கேயோ போய் தன்னாலே அலுத்துப்போய் வந்துருக்கே. நாளைக்குப் பார்த்துக்கலாம். இப்பப் போய் படுத்து ஒறங்குபோ. நாளியாச்சு.

இரு:—எனக்கு இப்ப எங்கே தூக்கம் வரப் போகுது?—சரி நீ போ.

பே:—எங்கே போகச் சொல்ரே?

இரு:—படுத்துறங்கத்தான்.

பே:—தூக்கம் வந்தா நீ சொல்லவா வேணும்? அப்பப் பிடிச்சுக் கொட்டுக்கொட்டிண்டில்லே முளிச்சுக் கிட்டுருந்தேன். ஒனக்கும் தூக்கம் வல்லேண்டா ஒரு காரியம் செய்வம்—வா. என்னாச்சும் பேசிக்கிட்டிருப்போம்.

இரு:—என்ன ஆத்தா பேசப்போறே?

பே:—(தயங்கித் தயங்கி) என்னனாச்சுந் தான்.

இரு:—ஒன் ஆசையெத்தான் கெடுப்பானேன்? பேசு ஆத்தா. நல்லாப் பேசு.

பே:—நீ இப்போ எங்கெங்கே போனே?

இரு:—எங்கே? தனபாலனெப் பிடிக்கத்தான்—அது இருக்கட்டும். என்னமோ பேசணுமிண்டியே. எதைப்பத்தி? நான் போன சமுசாரம் இருக்கட்டும்.

பே:—அதுவா? (இங்குமிங்கும் பார்த்துக்கொண்டே) ஒன்னெப்பத்தித் தான் விசாரிக்கணுமிண்டு ஆசை. ஒனக்கு எங்கே கண்ணாளம்?

இரு:—(சிரித்துக்கொண்டு) எங்கிருந்தா ஒனக்கென்ன ஆத்தா?—ஏன்? எதுக்காகக் கேக்கறே?

பே:—ஒரு பேச்சுக்கில்லே கேக்கறேன். கேட்டாச் செல்லேன்.

இரு:—சொல்ரேன் ஆத்தா. சொல்ரேன். ஒனக்குச் சொல்லாதே ஆருக்குச் சொல்லப்போறேன். எங்க அயித்தெ மக ஒருத்தியிருந்தா. அவ ஒம்மாதிரியே இருப்பா. நல்ல அளகு. அதெத்

தான் கட்டிக்கிறதிண்டு இருந்தேன். அதுக்குள்ளே அது செத்துப் போச்சிண்டு சமுசாரம் வந்திச்சு. அதுனாலே எங் கண்ணாளம் நிண்டிடுச்சு.

பே:—என்? அது போச்சின்டா வேறொருத்தியைக் கட்டிக்கப் படாது?

இரு:—அதுதான் பார்த்துக்கிட்டுருக்கேன். அம்முளுக்கு எல்லாத்துக்கும் வேளை வரவேண்டாமா ஆத்தா? ஒங் தயவுமட்டும் இருந்தாப் பொஞ்சாதிக்கு என்ன கொறச்சல்? இந்த உசருமட்டுமிருந்தா தன்னெப்போலெ என்னிக்காவது நடக்கிறது கண்ணாளம்.

பே:—இந்த இருளா! கறுப்பணச்சாமி மேலே ஆணைப்படிக்குச் சொல்ரேன்—தூ! விட்டேன். எனக்கு ஒன்னெக் கட்டிக்க ஆசைதான். ஆனா ஒம் மூஞ்சியில்ல பயமா இருக்கு. இல்லாட்டி ஒந் சாமார்த்தியத்துக்கு—அன்னிக்கு அத்தனை பேரையும்—பெரியவுகளைக் கூட—அடிச்சுப்போட்டியே,—அன்னிக்கே ஒன்னைக் கட்டிக்கிட்டில்லே மறுகாரியம் பார்த்திருப்பேன்.

இரு:—சரி. அன்னிச் சமுசாரம் இருக்கட்டும். இப்ப என்ன சொல்றே?

பே:—நீ என்ன சொல்றியோ அப்படிச்செய்யறேன். ஆனா வெடுவெடுப்பு மட்டும் எங்கிட்டக் காட்டாதிரு. சாமி சாக்கியாச் சொல்ரேன்—ஒன்னெயே கட்டிக்க எனக்கு ரொம்ப ஆசையாருக்கு. ஆனா—பயம் மட்டும் காட்டாதே.—இருக்கட்டும். என்னைக் கட்டிக்க ஒனக்கு ஆசைதானே?

இரு:—குட்டி! இந்தா! இந்தாலே வா! அவசரப்படாதே. ஒம் மூஞ்சியை ஒருதரம் பார்க்கிறேன். பயமக சிறுக்கி நல்ல அளகாத்தான் இருக்கே. ஒன் அளகுக்குத் தகுந்தவனை இல்லே நீ பாத்துக் கட்டிக்கணும்? நான் மாணும் ஆத்தா.

பே.—அளகு கெடக்கு. என்னமோ ஒன்னெந் தான் நான் கட்டிக்கப் போறேன்.

இரு:—ஆத்தாத்தா! அவசரப்படாதே! அப்படி யெல்லாம் செஞ்சடாதே. நான்தான் நடு வீட்டுக்குள்ளே வந்த பேய் இண்டியே. பேயை ஆராவது கட்டிக்கலாமா? நீயே சொல்லு.

பே:—பாத்தியா! பாத்தியா! நான் அப்போ இல்லே—நீ வந்த அன்னிக்குச்—சொன்னேன். கோவிச்சுக்காதே. நீ அப்போ பயமுறுத்தினேண்டு சொன்னேன். அதுக்கு இப்போ என்ன? ஒன்னெக் கண்டா—சத்தியமா அப்போ பயமாத்தான் இருந்தது. இப்போ இல்லெ. இங்கே வா. கிட்டேவந்து ஒக்காரு. ஒரு சமுசாரம் காதோடே சொல்றேன்.

இரு:—மாணும் ஆத்தா.—நீ அங்கேயே இரு. இருக்கற எடத்திலே இருந்தே சொல்லு. குசுகுசுண்டு சொன்னாலும் எனக்கு நல்லாக் கேக்கும். எனக்குப் பாம்புச் செவி. என்ன ரகசியம் பேசப்போறே?

பே:—என்னைக் கட்டிக்கப் போறியா மாட்டியா? அதைச் சொல்லு முதல்லே.

இரு:—வாயிட்டுச் சொன்னாப்போலே ஆச்சா? ஒன்னெக் கட்டிக்க எனக்கு யோக்கியதை வேண்டாமா? நெறயச் சம்பாரிச்சு ஆயிரம் பதினாயிரத்துக்கு நகை போட்ர போதில்லெ அதெப்பத்தி யோசிக்கணும்.

பே:—பெரியவுக கிட்டெ வேலைக்கு அமந்தவகளுக்கு சம்பாத்யத்துக்கு என்ன கொறச்சல்? அவுக சொல்ர வேலெயெக் கேட்டுட்டா கெடச்சுச்சே கூலி கைமேலே. ஆயிரமோ பதினாயிரமோ, அவுக அதிர்ஷ்டம்போலே இருக்கும். அது தான் என்னத்துக்கு? அவுகளுக்கு எய்பேரிலே ரொம்பப் பிரியம். அவுக சொத்தெல்லாம் எனக்குத்தான். அவுக தேடி வச்சிருக்கிற சொத்து அம்ப பேரன் பேத்திகளுக்கும் காணுமே.

இரு:—இருந்தாலும் நாமாச் சம்பாரிக்கிற சொத்து இருந்தா—அது ஒரு மாதிரி இல்லெ! இருக்கட்டும். பெரியவுகளும் அம்புட்டு சம்பாதிச்சு, அவுககிட்ட வேலைக்கு இருக்கிறவகளுக்கும் ஆயிரம் பதினாயிரம் கொடுக்கும்படி அவுக என்னவேலை செய்வாக.

பே:—எம்பொறகாலே வா. சொல்ரேன். இந்த வெளக்கெக் கையிலே எடுத்துக்கிட்டு வா.

[இருளனை ஒரு அறையில் அழைத்துக் கொண்டு சென்று, சாவிக்கொத்து ஒன்றை ஒரு அந்தரங்கமான இடத்தி

லிருந்து எடுத்துக்கொண்டு அதிரகஸ்யமான வேறொரு அறையைத் திறந்து அதற்குள் அவனை யிட்டுச் செல்கிறுள்]

அதோ பாத்தியா! ராசா உடுப்பு, போலீசுகார உடுப்பு, ஆண்டி பரதேசிக்கான காவிச் சொக்கா, பொம்பளை தலெ மயிரு, லவுக்கே, சிலெ, வேட்டிக, மொகமூடிக, மூலிகெக. இம்புட்டும் வகக்கி எம்புட்டு இருக்கு பாக்தியா? இந்தக் கத்தியெப் பாத்தியா! இப்பொ ஒனக்கு ஒண்ணும் தெரியலியே? (*அவனைப் பூதக்கண்ணுடியின் மூலமாகப் பார்க்கும்படிச் செய்து*) இதோ பாத்தியா இதில் இந்தத் தொவாரம். அதுக்குள்ளே என்ன இருக்குத் தெரியுமா? அம்புட்டும் வெசம். நம்மைப் பகச்ச பயலே இதுட்டு ஒரு இறுத்து இறுத்திக் கைப்பிடிகிட்டே இருக்கிற தக்கயெ அமுத்ரது தான் தாமசம். வெசம் தலெக்கேறிடும். ஆம்மா. செத்தான் அத்தோடே அந்தப் பய. இதுமாத்திரமா? இன்னும் எம்புட்டெம்புட்டோ செய்வாக. அவுக மூணஞ்சு மட்டும் வேலே செஞ்சா, அவுகளாலே முடியாதது ஒண்ணுமில்லெ. கொளெந்தகளேயோ, குமரிகளெயோ கோடீசுவார்களெயோ, தூக்கிக்கிட்டு வரவோ கொன்னுபோடவோ, ஏதாவது செஞ்சுபோடவோ, எத்தனேயோ பணக்காரப் பயக பெரியவக கிட்டவந்து சுத்திக்கிட்டும் கூலி பேசிக்கிட்டும் போவாக. சிலசமயம் அவுகளேதானு நேர்லே போக வேண்டி வந்தா போவாக. இல்லாட்டி நம்ம ஆளுகளே விட்டு வேலேகளெச் சாய்க்கச் சொல்லுவாக. வேலேயெ முடிக்கிரவகளுக்கு நல்லகூலி கிடைக்கும். கறுப்பன் அமாவாசை கலுவன் இவுக சம்பாரிச்சதெல்லாம் இப்புடித்தான். அவுகளே இம்புடடுச் சம்பாரிச்சபோது நீ சம்பாரிக்கக் கேப்பானேன்.

இரு:—(*அறையிலிருந்த சகல மர்மங்களேயும் நன்கறிந்து*) சரி! சொம்ப நாளியாச்சு. கதவெப் பூட்டிக்கிட்டுவா! தூங்கறவக முளிச்சுக்கிட்டாலும் முளிச்சிக்கிடுவாக.

பே:—(*கதவைப் பூட்டிச் சாவியைப் பழைய விடத்தில் வைத்துவிட்டு ஒரு தனித்த விடத்திற்குச் சென்று*) சரி! இப்ப என்ன சொல்றே? சொல்லு.

இரு:—என்னுத்தா! அடிக்கடி கேக்கறியே! அப்பலே ஒன் தய விருந்தாப் போதுமிண்டு சொல்லல்லே? என் சாமர்த்தியத்தைக்

காட்டி நல்லாச்சம்பாரிக்கிற காலத்திலே இதைப்பத்திபபேசுவோம். வெளியே போனவுக வர நாளியாச்சு. போ, படுத்துக்க. அவுக வந்தா நான் கதவு தெறக்கறேன்.

பே:—என்னையேன் போ போ இங்கரே? நான் இருந்தா ஒன்னை என்ன செய்யறேன்?

இரு:—சரி! நீ இரு. நான் போரேன். எனக்குத் தூக்கம் வருது.

பே:—சரி! இங்குட்டுவா, ஒரு சமுசாரம்.

இரு:—(அருகே வந்து) என்ன சமுசாரம்?

பே:—ஒண்ணுமில்லை— ஒரு முத்தங்குடு.

இரு:—எனக்கப்பலே தெரியுமே, நீ கிறும்பு செய்வே இண்டு. அது மட்டும் வேண்டாம் ஆத்தா. கண்ணாளம் ஆனதுக்கப்புறம் பாத்துக்குவம்:

பே:—மாட்டியாக்கும்? நீ குடுக்காட்டி நானுச்சுங் குடுக்கிறேன்,

இரு:—(இருந்த விடத்தினின்றும் ஓடி) இந்தா! சொல்ரதெக் கேளு! இப்போ வாணும். கிட்டே வந்தியோ கதவைத்திறந்துக்கிட்டு ஓடியே போய்டுவேன்.

பே:—(புன்சிரிப்புடன்) தூத்தேரி! வெக்கமில்லெ? ஆம்பளயாம் இவன்! பொம்பளக்குப் பயந்துகிட்டு ஓட்ரியே. பயமில்லே இண்டா அங்குட்டே நில்லு பாப்பம்,

[இச்சமயம் மாயாண்டி முதலானவர்கள் கதவிடிக்க, பேச்சி சென்று படுக்கை மீது படுத்துத் தூங்குவது போலப் பாவனை செய்கிறாள். இருளன் கதவைத் திறக்க யாவரும் உள்ளே செல்கின்றனர்]

(காட்சி முடிகிறது.)

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 6.

பத்திராதிபராதல்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி—திருவள்ளுவர்

முன் அத்தியாயத்தில் சொல்லியபடி, பெஞ்சமின் அதிக உழைப்பாளியாய் இருந்ததால் அவனுடைய அச்சக்கூடம் நாளுக்கு நாள் அதிக விருத்தியடைந்து வந்தது.

இப்பொழுது அவனுக்கு ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. இந்த விஷயத்தைத் தன்னிடம் வேலைக்கமர விரும்பிவந்த வெப் (Webb) என்பவனிடம் பெஞ்சமின் சொல்ல, அவன் இதைக் கீமரிடம் தெரிவித்துவிட்டான். இதைக் கேட்டதும், தாமே பத்திரிகை நடத்தி லாபம் அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் கீமர் ஒரு பத்திரிகையை அச்சிட ஆரம்பித்துவிட்டார். ஆயினும் பண ஆசைமட்டும் இருந்து பயனென்ன? திறமை ஏதுமில்லாத கீமரால் பத்திரிகை நடத்த எவ்வாறு முடியும்?

விஷயமில்லாத அவருடைய பத்திரிகையை வெகு சிலரே வாங்கி வாசித்தனர். தாம் நினைத்தபடி லாபங் கிடைக்காததால், அவர் அப் பத்திரிகையைப் பத்திரிகானுபவமுள்ள பெஞ்சமினுக்கு வெகு சொற்பத் தொகைக்கு விற்றுவிட உடன்பட்டார். ஏற்கனவே பத்திரிகை நடத்தத் தீர்மானித்திருந்த பெஞ்சமினுக்கு, வெப் செய்த வேலை, நன்மையாகவே முடிந்தது ஈசுவர சங்கற்பமே. பெஞ்சமின் கீமர் விரும்பிய தொகையைக் கொடுத்து அப்பத்திரிகையை விலைக்கு வாங்கித் தானே பத்திராதிபனயிருந்து நடத்த ஆரம்பித்தான். [இதுவரை ஒருமையில் பேசிவந்த பெஞ்சமினை, இனி, அவனது தகுதியையும் பதவியையும் கருதி, மரியாதையாய்ப் பன்மையிலேயே பகர்ந்து வருவாம்]

பத்திரிகையின் முதல்இதழ் 1729-ளு அக்டோபர்-மீ 2உ வெளி வந்தது. எடுத்தகாரியத்தை இனிது நிறைவேற்றும் இயல்

புடைய பெஞ்சமின், மிகுந்த கவலையுடன் இப்பத்திரிகையை நடத்தலானார். எழுதும் விஷயங்களைப் பயமில்லாமலும், நடுநிலையில் நின்றும், கைம்மாறு கருதாமலும், உள்ளதை உள்ளவாறும் எழுதிவந்தால், இப்பத்திரிகையைப் பலர் ஆதரிக்கலாயினர்: இச்சமயம் நிகழ்ந்த ஓர் சம்பவமானது, பெஞ்சமின், தமக்குத் தீதுவரினும், நலம் வரினும், உள்ள விஷயத்தை உள்ளவாறே துணிந்து உரைத்து வந்தார் என்பதை நன்கு விளக்குகிறது:

பிலடல்பியாவில் இருந்த சில பிரமுகர்கள் பொது விஷயங்களில் நடந்து கொண்டமாதிரி நியாய விரோதமானதென்று, பெஞ்சமின் தலையங்கத்தில் அதிதைரியத்துடன் எடுத்துக்காட்டி அவர்களுடைய அடாதசெய்கையைக் கண்டித்திருந்தனர்.

இதைப் படித்துப் பார்த்த இவர் நண்பர் பலர், பெஞ்சமின் இவ்வாறு எழுதியது சரியல்லவென்றும், பெரியாருடைய மனஸ்தாபத்தைத் தேடிக்கொள்ளல் வயிற்றுப் பிழைப்பிற்கே தீமை விளைவிக்கக்கூடியதென்றும், லௌகிகத்திற்கு அது விரோதமானதென்றும் சொன்னார்கள். பெஞ்சமினே தாம் எழுதியதில் தவறே இல்லையென உணர்ந்தார்: ஆயினும் வாய்ப்பேச்சினால் எவ்வளவும் அவர்களுடைய அபிப்பிராயத்தை மாற்றத் தம்மால் முடியாதென அறிந்த அவர் தாம், எவருடைய ஆதரவின்றியும், நேர்மைக்கு விரோதமில்லாமலும் காலட்சேபம் செய்யக்கூடு மென்பதை அவர்களுக்குக் கண்கூடாக் காட்ட நினைத்து ஒருகாரியம் செய்தார்.

அவர் தமக்குப் புத்திபுகட்டிய அந்நண்பர்களைத் தம் வீட்டில் விருந்துண்ண அழைத்து அவர்களை உபசரித்தார். அந்தச் சமயத்திலும் அவர்கள் தங்கள் பழைய அபிப்பிராயங்களைப் பெஞ்சமினுக்கு எடுத்துரைக்கலாயினர். அவர்கள் கூறிய யாவையும் பெஞ்சமின் பொறுமையோடும் மௌனமாகவும் கேட்டுக்கொண்டிருந்தனர். பின்பு உணவளிக்கப்பட்டது. சம்பிரமமான விருந்தை எதிர்பார்த்திருந்த அவர்களுக்குக் கேவலமானதும் பொருக்கெடுத்து வற்றி உலர்ந்ததுமான ஒருவிதக் கேழ்வரகு ரொட்டியும், ஒரு கற்பாத்திரத்தில் குடிநீரும் கொண்டுவந்து வைக்கப்பட்டன. அந்த ரொட்டி வாயில் வைக்க வழங்காதவைகளாய் இருந்ததால், சிறந்த உணவே உண்ணப் பழகிய அந்நண்பர்கள், அவற்றை உண்ண எவ்வளவு முயன்றும் முடியாது விழித்தனர். பெஞ்சமினோ, வெகு அலட்சியமாய் அவற்றை

மேலும் மேலும் புசிக்க ஆரம்பித்தார். மற்றவர்களையும் சாப்பிடு மாறு வேண்டினார்.

ஆயினும் அவர்களால் ஒருவாய் உணவும் உட்கொள்ள முடிய வில்லை. உடனே பெஞ்சமின் அவர்களை நோக்கி, "நண்பர்களே! அதிகக் கேவலமானதும், உங்கள் வாயில் உட்புகாததுமான இவ் வுணவையும் நீரையும், இன்றேபோல் அதிகக் குதூகலத்துடன் அருந்தி என்றும் காலங்கழிக்கவல்ல எனக்கு, உண்மை உரைப்பத னால் 'உயர் நிலை யுற்றோ'ருடைய மனஸ்தாபம் நேர்ந்தகாலத்தும், எவருடைய ஆதரவின்றியும் வயிறு வளர்த்தல் இயலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆதலால், கேவலம் வயிற்றுப்பாட்டுக் கஞ்சி ஒரு போதும் வாய்மை இழவேன்" என்றார்.

இம்மாதிரியே பல முக்கிய விஷயங்களைப்பற்றிப் பயமென்பது சிறிதுமின்றித் தலையங்கங்கள் வெகு சிறந்த நடையில் எழுதப்பட்டு வந்ததால், அநேகர் இப்பத்திரிகைக்குச் சந்தாதாராயினர்.

இச்சமயம் பெஞ்சமினின் கூட்டாளியாயிருந்த மெரிடித், அவரி னின்று விலகநேர்ந்தது: அச்சுக்கூட சாமான்களைக் கடனாகக்கொடு த்த வியாபாரிக்கு, அவனுடைய தகப்பனார் முன்னைய ஒப்பந்தப்படி அவனுக்குச் சேரவேண்டிய நூறு பவுன் கொடுபடாததால், அவன் வியாஜ்யம் செய்துவிட்டான். பணம் உடனே கொடுபடாவிட்டால் அந்தச் சாமான்கள் யாவும் ஏலம் போய்விடுவதாயிருந்தன.

'உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்ற பிரகாரம், பெஞ்சமினின் இரு நண்பர்கள் அவருக்குப் பண உதவிசெய்ய முன்வந்தனர். மெரிடித் தனக்கு அச்சுக்கூட வேலையில் அவ்வளவு பிரியமில்லை என்று தெரிவித்துக் கொள்ளவே, பெஞ்சமின், தம் இரு நண்பரிடமிருந்து வேண்டிய தொகையைக் கடனாக வாங்கி மெரிடித்துக்குக் கொடுத்து, அவனுக்கும் அச்சுக் கூடத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென எழுதி வாங்கிக் கொண்டு, அவனை நீக்கி விட்டார். பின்பு அவர் வியாபாரியின் கடனை முற்றிலும் தீர்த்து அச்சுக்கூட உரிமையாளரானார்.

பெஞ்சமின் 1730-௵ டிபோரா (Deborah) என்னும் பெய ருடைய மாதை மணந்தார். இம்மாது எவ்விதத்திலும் பெஞ்சமி னுக்கு எற்றவளே: அவள் செட்டாய்க் குடித்தனம் செய்ய வல்ல வள். அரைக்கணமும் சோம்பியிராமல் சுறுசுறுப்பாக வேலை செய்

4

யப் பழகியவள். ஆடம்பரங்களில் விருப்பில்லாதவள். வீட்டு வேலைகளைத் தக்கவாறு நன்கு கவனித்து வந்ததுடன், அவள் அவர் நடத்திய பத்திரிகைகளை மடித்தல் முதலியவற்றிலும், அவர் நடத்திய கடை வியாபாரங்களிலும் அவருக்கு மிக்க உதவி புரிந்து வந்தாள். அவள் போன்றோரைக் குறித்தே,

'செட்டுள்ள பெண்கையில் செல்வஞ் செழிக்குமே
சேந்திரு வே! தன் வரவை மிஞ்சி
மட்டில்லா மற் செல விட்டு வரப்பணம்
கெட்டோடிப் போமடி தோழிப்பெண்ணே' என்பது

போன்ற கும்மிப் பாடல்கள் எழுந்தனபோலும்.

அதிசீக்கிரத்தில் இவர்களுடைய வீட்டில் சீரும் செல்வமும் நிரம்பின. சகலவித கடன்களும் அடைபட்டன. பெஞ்சமின் ஜனங்களாலும் அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பட்டு வரலாயினர்.

P. சுந்தரராஜ ஐயங்கார், B. A.,

விநோதக்கூற்று.

ராமு:—நீ தினம் பத்திரிகைகளுக்கு ஏதாவது எழுதிக்கொண்டே இருக்கிறாயே, உனக்குப் பணம் என்ன கிடைக்கிறது?

சாமு:—பணமா? ஒருகாசுகூட இல்லை.

ராமு:—பின்னே ஏன் வீண் தபாற் செலவும் உபத்திரவமும்? இருக்கட்டும்;—பத்திராதிபர்கள் உனக்கு வந்தனமாவது கூறுவதுண்டா?

சாமு:—ஏன்? அனுப்புந்தோறும், யாவரும் அறிய, எனக்கு அது மட்டும் கிடைத்து வருகிறது. தனிக்கடித மூலமாகவும் கிடைத்து வருகிறது: வந்தனங்களுக்குக் குறைவில்லை.

ராமு:—அப்படியாயின் எனக்கு, உனக்கு வந்தனம் கூறியுள்ள ஒரு பிரதியையேனும் காட்டுவாயா? எனக்குப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மிகுதியாயுள்ளது.

சாமு:—அதற்கென்ன! ஒன்று கேட்டாய்? இந்தப் பத்துப் பிரதிகளையும் பார். இக்கடிதங்களையும் பார்.

ராமு:—(படித்துவிட்டு) பேஷ்! பேஷ்! நல்லபோடுபோட்டாய். உன் பாக்கியமே பாக்கியம்.

☞ காட்டிய பிரதிகளில் ஒன்று தவறாமல் "சாமு"—"வந்தனத்துடன் மறுக்கப்பட்டது—ப-ர்" என்பதும்,—"அனுப்பிய கடிதம் வந்தனத்துடன் திரும்ப அனுப்பப்பட்டது" என்பதுமே ராமு கண்டவை.

கிருஷ்ண மூர்த்தி.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

மாண்டவன் மீண்ட மாயம்.

முதலாவது அத்தியாயம்.

மாயக் கடிதங்கள்.

The Mysterious Letters.

மதுரையில் ஒரு பெரிய வீட்டின் மெத்தையறையின் நடுவில் போடப்பட்டிருந்த மேஜையின் முன், ஒருநாற்காலியில் உட்கார்ந்து மேஜையின் அடிச்சட்டத்தில் தன் இருகால்களையும் வைத்து, தான் அமர்ந்திருந்த நாற்காலியை மெதுவாக முன்னும் பின்னும் அசைத்துக்கொண்டு, சுமார் 25-வயதுள்ள ஒருவர், ஏதோ ஒரு புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந்தார். அவ்வீட்டின்முன் "கைலாஸம் பி. ஏ; பி. எல்; ஹைகோர்ட்டு வக்கீல்" என்று எழுதிய ஒரு விளம்பரப் பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. வாசல் திண்ணையில் இரண்டு மூன்று குமாஸ்தாக்கள் எழுதிக்கொண்டும், கட்சிக்காரரோடு வாதாடிக்கொண்டும் இருந்தனர்.

மாடி அறையில் நாற்புறச் சுவர்களிலும் விசித்திரமான படங்கள் மாட்டப்பட்டிருந்தன. மேஜைக்கு அருகில், மூன்று புறமும் 'அமெரிக்கன்' நாற்காலிகளும், சற்றுத் தள்ளி மூன்று சாய்வு 'பெஞ்சு'களும் போடப்பட்டிருந்தன. எதிர்ச் சுவரில் மாட்டியிருந்த பெரிய கடியாரம், 'டிங், டிங்' என்று 10-மணி அடித்தது. உடனே வக்கீல், கையில் பிடித்த புஸ்தகத்தை மூடி மேஜைமீது திடீரெனப் போட்டுவிட்டு, மேஜை மீதிருந்த மணியை அழுத்தவே, அது 'கிணு கிணு' என்று சப்தித்தது. உடனே ஒரு குமாஸ்தா ஒரு கடிதத் துண்டைக் கொண்டுவந்து தர, வக்கீல் அதைப்பார்த்து விட்டு 'வரச்சொல்' என்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சுமார் இருபத்துநான்கு இருபத்தைந்து வயதுள்ள ஒருவர், வந்தனம் கூறிக்கொண்டே சிரித்த வண்ணமாய் உள்ளே நுழைந்தார். வக்கீலும் சிரித்துக்கொண்டு,

"வா அப்பா, ராமஸ்வாமி! எது? மரியாதை தடபுடலாக இருக்கிறதே! எப்போது வந்தாய்? என்ன விசேஷம்? 'லீவ்' எடுத்துக்கொண்டிருக்கிறாயா?" என்றார்.

ராம:—"2½ மணி வண்டியில் வந்தேன். இரண்டுமாதம் 'பிரிவிலேஜ் லீவ்'. நமது பழைய சிநேகர்களைப் பார்த்துப்போகலாம் என்று வந்தேன். முகம் மறந்துபோயிற்று. பேஸ்வாடாவில் இருக்கிறேன். தெரியுமல்லவா? நித்தியம் விடிந்தால் சுற்றுப்பிரயாணம் தான். உன்னைப்போல் கவலையின்றி,—"

கைலா:—ஏன்? வருஷத்துக்கு ஒரு மாதம் 'லீவ்' உண்டே. ஏன் வாங்கிக்கொள்ளலாகாது?—அது வெள்ளைக்காரன் தான்—தவறுமல்'—அவன் தான் அனுபவிக்கப் பிறந்தவன்—நாமெல்லாம்—"

ராம:—"நமக்கு ஆக்ஷேபமில்லை-யார் 'லீவ்'கொடுக்கிறார்கள்!"

கைலா:—"சரி—என்ன விசேஷம்?—"

ராம:—(ஒரு கடிதத்தை நீட்டி) "இதைப்பார்."

கைலாஸம் அதைப் பின்வருமாறு வாசித்தான்:—

"என் அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

நீ தயை செய்து கூடிய சிக்கிரம் என்னை இவ்விடத்தில் பார்க்கவேண்டும். அந்தரங்கமாய்ச் சில விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கிறது. உன் பேற்றோரைப் பற்றியும் சில விஷயங்கள் உண்டு.

மதுரை
18—3—05 } உன் அன்புள்ள,
பாலாம்பாள்"

கைலா:—(குலுங்கச் சிரித்து) "அப்படியா? ராமஸ்வாமி! என்ன? என்ன? பாலாம்பாள்! பாலாம்பாள்!!. பேஷ்! பேஷ்!! நல்லஆள் பிடித்தாய்! உனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லையே? வேண்டியதுதான் துணைக்கு—"

ராம:—"என்னடா! என்ன? என்னகண்டு பிடித்துவிட்டாய்?"

கைலா:—"என்ன கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது?"

ராம:—(சிரித்துக்கொண்டு), "வெறும் வாயையே மெல்வோர் வக்கீல்கள். அவல் கிடைத்தால்?—கொஞ்சம் இடம்கிடைத்தால்

கோட்டை கட்ட மாட்டார்களா?—சரி; இந்தக் கடிதத்தைப்பார்" என்று இன்னொரு கடிதத்தை நீட்டினான்.

கைலாசம் அதையும் வாசித்தான். அதில் பின்வருமாறுஎழுதப் பட்டிருந்தது:—

"அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

உனக்கு 'லீவ்' கிடைத்ததும் நேரே மறவாமல் என்னை வந்துபார். பாலாம்பாள் என்பவள் தன்னைப் பார்க்கும்படி ஒருவேளை உனக்கு எழுதியிருக்கலாம். அந்தக் கடிதத்துடன் நீ அவளைப் பார்க்குமுன் என்னை வந்து பார். இது முக்கிய விஷயம்.

மதுரை
20—3-05

உன் அன்புள்ள,
சிதம்பரம்."

கைலாஸம் இரண்டு கடிதங்களையும் பார்த்துவிட்டு, இடதுகை விரல்களால் தன் கன்னத்தைக் கரைத்துக்கொண்டு, சற்று ஆலோசித்து, பின், ராமஸ்வாமியை ஏறிட்டுப் பார்த்தான்.

ராம:—"என்ன் கைலாசம்! என்ன ஆலோசிக்கிறாய்?"

கைலா:—"என்ன? எல்லாம் ஏதோ வஞ்சகமாயிருக்கிறது"

ராம:—"வஞ்சகம்! (திடுக்கிட்டு) நீ சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லையே".

கைலா:—"நான் சொல்வது தப்பிதமா இருந்தாலும் இருக்கலாம். எனக்குத் தோன்றுவது இப்படித்தான்: உன் பெற்றோரைப்பற்றித் தனக்குத் தெரிந்ததை உனக்குச் சொல்லிப் பணம் பிடுங்கப் பார்க்கிறாள் பாலாம்பாள்.—ஆனால் சிதம்பரம் அதை அறிந்து உன்னைத் தடுக்க முயல்கிறார். அதனால்தான், நீ அவளைப் பார்க்குமுன் தன்னைப்பார்க்கும்படி சிதம்பரம் உனக்கு எழுதியிருப்பது".

ராம:—"இருக்கலாம்.—ஆனால் என் பெற்றோரைப்பற்றி இந்த அம்மாள் சொல்லக்கூடியது என்ன இருக்கலாம்? அவர்கள், என் நான்காவது வயதிலேயே இறந்துவிட்டார்களே. இப்பொழுது, இருபது வருஷங்களாகின்றனவே அவர்கள் இறந்து!—"

கைலா:—"அந்த விஷயம் சிதம்பரமிடமிருந்துதான் நீ அறிந்துகொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் அவரைப் போய்ப் பார் இன்று மாலை"

ராம:—(யோசித்து) "பாலாம்பாள் என்பவள் வயதானவளாய்த் தான் இருக்கவேண்டும்—"

கைலா:—"எதனாலே?"

ராம:—"அவளுக்கு என் பெற்றோரைப்பற்றித் தெரியுமென்றால்?—அவர்கள் இறந்தோ இருபது வருஷங்களாயின. அந்தக்காலத்தில் அவளும் சற்று வயதானவளாகத் தான் இருந்திருக்கவேண்டும். அவள் அவர்கள் தோழியாகவாவது, வேலைக்காரியாகவாவது இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

கைலா:—"சரி! என்னயோசனை? வரவரத் தெரிகிறது.—இருக்கட்டும்.— சிதம்பரத்தின் ஜாகை தெரியுமா?"

ராம:—"தல்லாகுளத்தில் அவர் ஒரு பங்களா வாங்கி இருக்கிறாராம். அதைத் தவிர மங்களபுரம் கிராமத்தில் பங்களாவும் நிலமும் வாங்கி யிருக்கிறாராம்."

கைலா:—"ஓஹோ! இப்பொழுது தான் ஞாபகம் வந்தது. மங்களபுரத்தில் நானும் ஒரு பங்களா கட்டியிருக்கிறேன். பெரியாற்று வாய்க்கால் ஜலம்—மிகுந்த வசதியாயிருக்கும்—100 ஏக்ரா நன்செய்—சேர்ந்தாற்போல முன் 20-வருஷம் தீர்வை தண்டம் கொடுத்து வந்தார் என் தகப்பனார்—நல்லவேளை—பெரியாறு வர அவ்வளவும் நன்செயாய் விட்டது. இன்றைத்தினத்தில் 75,000 ரூபாய் கைமேலே கிடைக்கும்."

ராம:—"ஓஹோ! பெரிய ஸம்ஸாரியாய் விட்டாய் – கல்யாணமாயிற் றல்லவா?"

கைலா:—"வேடிக்கைப் பேச்சு இப்பொழுது வேண்டாம்.—தெய்வ கிருபையால் சிதம்பரம் நல்ல சமாசாரம் சொல்லவேண்டும்"

ராம:—"எது? எனக்குத் தோன்றவில்லை"

கைலா:—"ஏன் அப்படி? நாம் நல்லதையே நினைப்போம். இந்த விஷயத்தில் என்னால் கூடியவரை உதவிசெய்யத் தயார் நான்'.

ராம:- பார்ப்போம், ஈசுவரசங்கற்பம் எப்படியிருக்கிறதென்று.

R. S. நாராயணசாமி ஐயர், B.A., B.L.

பத்திராபர் குறிப்புகள்.

விடுவிப்பு வினுக்களுக்குத் தக்க விடை அனுப்பியோரது பெய ராதியன ஜூலை-மீ சஞ்சிகையில் வெளியாகும்.

நம் பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய முன்வரும் அபிமானிகள், தம் முழு விஷயத்தையும் அனுப்பினல் அல்லாது, அவர்கள் நினைத்தபோது அனுப்பும் பகுதிகளை, (அவற்றின் தன்மை யறிதற்கிடனின்றியும், அவர்கள் சோம்பேறித்தனத்தாலோ, பிறகாரணங்களாலோ ஏற்படும் கால நஷ்டத்திற்கு நாம் உள்ளாகியும்) பிரசுரித்துவர எம்மால் இயலாதென்பதை வணக்கத்துடன், தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நமக்குக் கிடைத்துவந்த மாற்றுப் பத்திரிகைகள் சில, மாதக்கணக்காய் எம் கைக்குவந்து சேராமைக்குக் காரணம் விளங்கவில்லை. பத்திராதிபர்களுக்கோ, அப்பத்திரிகைகளுக்கோ நேர்ந்திருக்கக்கூடிய சில அசௌகரிய அசந்தர்ப்பங்களால் அவைகள் தற்காலம் நின்றும் சீக்கிரத்தில் வெளியாவதாயுமிருப்பின், அவ்விஷயத்தை, அப்பத்திரிகையின் அதிபர்கள் எமக்கு அறிவித்திடுமாறு வேண்டுகிறோம். பத்திரிகை அனுப்பாமலோ, அனுப்பாமைக்குக் காரணம் தெரிவியாமலோ இருப்போர்க்கு எம் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

திருவனந்தபுரத்திலிருந்து "நாடார் நண்பன்," திருவிடைமருதூரிலிருந்து "தொழிற்கல்வி" நட்டால்: டர்பகானிலிருந்து "விவேகபாது"—என்னும் பத்திரிகைகள் இம்மாதம் மாற்றுப் பத்திரிகைகளாக வரப்பெற்றோம். அவற்றை விரும்பி நமக்கு அனுப்பிய அன்பார்ந்த சகோதரப் பத்திராதிபர்கட்கு நன்றி கூறுகிறோம்.

இந்தச் சஞ்சிகைமுதல் வெளிவரும் "மாண்டவன் மீண்டமாயம்" என்பது, பிரான்சு தேசத்தவரான நாவலெழுதுவதில் அதி நிபுணத்துவம் வாய்ந்த 'பர்கஸ் ஹ்யூம்ஸ்' என்பவர் எழுதிய "மறைந்தோரது மர்மம்" (Masquerade Mystery) என்ற ஓர் அழகிய நாவலைத்த மூவி எழுதப்பட்ட ஒரு துப்பறி நாவலாகும். இது இனிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதைச் சிறுவரும் படித்துச் சந்தோஷிப்பர் என்பதில் ஐயமில்லை.

நிசுளாபுரி, சாமளாதண்டகத் தமிழ்மொழிபெயர்ப்புச்செய்யுள் முதலியவற்றைப்பற்றிய நம் மதிப்புரை அடுத்த சஞ்சிகையில் வரும்.

பத்திராதிபர்.

இனம்! இனம்!! இனம்!!!

ஒரு ரூபாய் அல்லது ரு 1-4 அணு விலையுள்ள எமது பிரசுரங்கள்.

குறுக்கு வார்த்தை பந்தனம்.

1	2		❀	3	4	5
6		❀	7	❀	8	
	❀	9		10	❀	
❀	11					❀
12	❀	13			❀	14
15	16	❀		❀	17	
18			❀	19		

இடமிருந்து வலம்.

1 தித்திப்பு
3 உரிமை
6 அடக்கம்
8 கடல்
9 வண்டு
11 சான்றி
13 ஒளி
15 சம்பாஷணை
17 ஆகாயம்
18 சாரம்
19 பசி

மேலிருந்து கீழ்.

1 இயல்பு
2 காற்று
4 முயற்சி
5 திரைப்பு
7 நொச்சி
9 ஆடுதின்னுப்பாளை
10 திகழென்னேவல்
12 திப்பிலி
14 கருவண்டு
16 கொடி (மாற்றி வாசிக்க)
17 ஒருவருஷம்

மகா-ா-ா-ஸ்ரீ "நச்சினார்க்கினியன்" பத்திராதிபர் அவர்களுக்கு
ஐயா,

விடையில் தங்கள் தீர்ப்பே முடிவானதென்றும் சட்ட சம்பந்தமாய்ச் செல்லத்தக்கதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர் ______________________

விலாஸம் ______________________

தேதி ______________________

☞ விடைகள் ஆடி-மீ 30உக்குள் கிடைக்கவேண்டும்.